*Registered as a News Paper* பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 27 11 - 07 - 1992 சனிக்கிழமை ஓசை 144

## நெய்தல் ஒலிப்பதிவு நாடா நேற்று வெளியிடப்பட்டது

கடற்புலிகளின் கலைஞர்களை ஒன்றிணைத்து விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'நெய்தல்' ஒலிப்பதிவு நாடாவின் வெயீட்டு விழா நேற்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. கடற்புலிகளின் தளபதி கங்கை அமரன் மங்கள விளக்கேற்றி இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார். இவ் ஒலிப்பதிவு நாடாவிற்கான வெளியீட்டுரையை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்தினார். வண. பிதா யோசப் ஜீ. ர. பிரான்சிஸ் அடிகள் உட்பட பல பிரமுகர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். இவ் வைபவத்தில் மேற்படி ஒலிப்பதிவு நாடாவின் உருவாக்கத்தில் பங்கு பற்றிய (4ஆம் பக்கம் பார்க்க)

# இயக்கச்சியில் நிகழ்ந்த கடும் சமர்

# 20 ராணுவம் பலி: 35 பேர் காயம்

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உக்கிர மோதலில் இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 35 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றுக் காலை 6.00 மணியளவிலிருந்து இரவுவரை இடம்பெற்ற மோதலில் இராணுவ வாகனங்கள் பல சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.


நேற்று முன்தினம் வாடிய டிப் பகுதியில் இருந்து இயக்கச்சி சந்திவரை முன்னேற முயன்ற இராணுவத்தை சங்கத்தார்வயல்பகுதியில்வழிமறித்து விடுதலைப்புலிகள் தாக்கியதைத் தொடாந்து உககிர மோதல் மூண்டது. இம் மோதல் நேற்று இரவுவரை நீடித்ததோடு இயக்கச்சிப் பகுதிவரையும் பரவியது. சிறிலங்கா இராணுவத்தின் பலத்த எறிகணை வீச்சுக்கு மத்தியில் இடம்பெற்ற இம் மோதலில் காலையில் இருந்து மாலைவரை மிகவும் உக்கிரமாகவே நடைபெற்றவண்ணமிருந்தது.

இம் மோதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 35 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பினும், கொல்லப்பட்டவர்கள் தொகை அதிகமாக இருக்கலாம் எனவும், அனால் உண்மை நிலையை அறியமுடியாமல் இருப்பதாகவும் பா.பி.ஸி. அறிவித்தது.

இதேவேளை, இம் மோதலில் ஒரு 'டாங்கி' அழிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டிருப்பினும், மேலும் சில இராணுவ வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளுடன் டலவேகய-2 இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

### இயக்கச்சியில் வீரச்சாவு மேஜர் அசோகன் (கிண்ணி)



(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற நேரடிமோதலில் விடுதலைப் புலிகள் போராளி மேஜர் அசோகன் (கிண்ணி - கந்தசாமி துரைரவீந்திரன் வேம்படி வல்வெட்டித்துறை) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுத

### கோவை மகேசனுக்கு இன்று நினைவஞ்சலி

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் கோவை மகேசன் அவர்களுக்கு நடாத்தும் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில்பிற்பகல்5மணிக்கு நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் தேவர் அவர்களின் தலைமையில் நடைபெறும். மேற்படி நினைவஞ்சலிக் கூட்டத்தில் நினைவஞ்சலி உரைகளை சா.ஆ. தர்மரத்தினம், ஐயா சச்சிதானந்தம், எஸ்.ரி. அரசு, க. சொக்கலிங்கம், தமிழ்மறவன், பொன். பூலோகசிங்கம், யோகரத்தினம் யோகி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### பிரேமாவின் விஜயம் செப்டம்பர் 25-இல் ஆரம்பம்


(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசாவின் சார்க் நாடுகளுக்கான விஜயம் செப்டம்பர் இருபத்தைந்தாம் திகதி ஆரம்பமாதம் என்று தெரிவிககப்பட்டுள்ளது. அக்டோபர் பத்தாம் திகதி வரை நீடிக்கும் இப் விஜயத்தின்போது அவர் பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு ஆகிய சார்க் நாடுகளுக்கு விஜயம் செய்வார் என்று சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

### வீரச்சாவு



வீரவேங்கை அருள்நம்பி



வீரவேங்கை கலையரசன்

பலாலிப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் துணிகரத் தாக்குதல்

# தங்களாயில் 18 இராணுவம் பலி



வேம்படி வல்வெட்டித்துறை) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மக்கள் அஞ்சலிக்கு

மேஜர் அசோகனின் [கிண்ணி] புகழுடல் யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியிலுள்ள வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், மானிப்பாய் யாழ்ப்பாணம், அரியாலை கோப்பாய் ஆகிய பகுதிகளிலும்,

தென்மராட்சி பிரிவில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளிலும்; வடமராட்சி பிரிவில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை உடுப்பிட்டி ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலுள்ள புனித புதைகுழியில் விதைக்கப்படும்.

## மேலும் பல பொருள்களுக்கு இராணுவம் தடை விதிப்பு

(வவுனியா)

தென்பகுதியிலிருந்து மேலும் பல பொருள்களை வடபகுதி நோக்கிக் கொண்டு செல்வதற்கு இராணுவம் தடைவித்துள்ளது.

வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற பொருள்களுடன் மின்சாரத்தில் இயங்கும் வேறு பல பொருள்கள் எவற்றையாயினும் வடபகுதிக்கு கொண்டு செல்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது,

# கந்தளாயில் 18 இராணுவம் பலி

## ரோந்து அணி நிர்மூலம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய துணிகரத் தாக்குதலில் 18 இராணுவத்தினர் பலியாகினர்.

நேற்று கந்தளாய் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவ அணியினமீதே இந்தாக்குதல் நடாததப்பட்டது. இத்தாக்குதலால் இராணுவ அணி நிர்மூலமாகியது. பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் பறறி மேலும் தெரியவருவதாவது: நேறறுக் காலை 7.00 மணியளவில் கந்தளாய் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இராணுவ முகாமிலிருந்து வாழைமடு இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது கந்தளாய் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

12 நிமிடம் இடம் பெற்ற இத்துணிகர அதிரடித் தாக்குதலால் 18 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே பலியாகினர்.

இவர்களுக்கு உதவியாக வெளியேறிவந்த வாழைமடு இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்த வெற்றிகரமான தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

கடந்தமாதம் ஒன்பதாம் திகதி மகிந்தபுரத்தில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த ஏழு போராளிகளின் 31 ஆம் நாள் நினைவாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 50 கலிபர் தாக்குதல்

(குருநகர்)

நேற்று முற்பகல் 10.20 மணியளவில மண்டைதீவு முனை சிறிலங்கா காவலரண் பகுதியில் இருந்து சிறுத்தீவுப் பகுதியை நோககி இராணுவத்தினர் 50 கலிபர் வேட்டுகளைத் தீர்த்தனர்.

விட்டு விட்டு தீர்க்கப்பட்ட வேட்டுகள் ஏறததாள 10 நிமிடங்கள் வரை நீடித்தன (21)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ★ ஏ. கே. எல். எம். ஜி. - 02
- ★ ரி 56 - 2 - 06
- ★ ரி 56 - 1 - 08
- ★ ரி 56 - பட்மோடல் - 02
- ★ ஏ. கே. எல். எம். ஜி. மகசின் - 10
- ★ ஏ. கே. எல். எம். ஜி. லிங் - 941
- ★ ஏ. கே. மகசின் - 57
- ★ நடுத்தர ரவைகள் - 1862
- ★ ஜே. ஆர். கைக்குண்டு - 02
- ★ ஏ. கே. கோல்சர் - 15
- ★ மைன்ஸ் கிண்டி - 01
- ★ சப்பாத்து - 12 சோடி
- ★ தொப்பி - 13
- ★ மில்ரிபெல்ட் - 08
- ★ கிட்பாக் - 02
- ★ மழைக்கவச அங்கி - 01

# வளலாயில் காவலரண்கள் தகர்ப்பு 3 படை பலி: ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வளலாய்ப் பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவக் காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மூன்றிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

மேற்படி பகுதியில் உள்ள இரு காவல் அரண்கள் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இவ் அதிரடித் தாக்குதல் நடாத்தப்பட்டது. சுமார் பத்து நிமிடங்கள் வரை நடைபெற்றஇத்தாக்குதலின்போது சுமார் மூன்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டிருக்கின்றனர். காவல் அரணில் இருந்த ஏனைய இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ஆர். பி.ஜி. - 01
- ★ ரி. 81-1 ரகத்துப்பாக்கிகள் - 02
- ★ ஜி.3 ஏ.3 ரகத்துப்பாக்கி - 01
- ★ ரி. 81 மகசின் - 02
- ★ ரம் மகசீன் - 04
- ★ நடுத்தரரவைகள் - 165
- ★ லிங்குகள் - 125
- ★ நேற்ரோரவைகள் - 10
- ★ சப்பாத்து - 1 சோடி

## நான்கு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வளலாய்ப் பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவக் காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகளால் நேற்றுநடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் செங்கதிர் (லுக்மன் வலிதியான் சின்னக்தம்பி மறைக்காடு குடத்தனை), லெப். சுடரொளி (தீபன் குழந்தைவடிவேல் ரமேஸ் இரண்டாம் குறுக்குத்தெருபருத்தித்துறை) வீரவேங்கை நாவலன் (முனியாண்டி குமார், சிவபுரம் மல்லாவி கிளிநொச்சி), வீரவேங்கை இந்திரன் (மயில்வாகனம் சந்திரன் முள்ளிவீதி அரியாலை, யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆலங்குள சுற்றிவளைப்பில் 2பொதுமக்கள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆலங்குளம் என்னும் கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதுடன் ஆறு பொதுமக்களை முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது, சடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் காயாங்கேணி, காகித ஆலை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து 100க்கு மேர்பட்ட இராணுவத்தினர் வெளியேறி வந்தனர்.

இவர்கள் ஆலங்குளம் கிராமத்தைச் சுற்றி வளைத்து காலை 6.00 மணியளவில் இரண்டு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். பின்னர் அவர்களின் உடல்களை முகாமிற்கு கொண்டு சென்றனர்.

அதுடன் ஆறு பொதுமக்களைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன் பெண்களின் நகைகளும் இராணுவத்தால் கொள்ளையிடப்பட்டன.

கணபதிப்பிள்ளை நவரத்தினம் (வயது19, ஆலங்குளம்), பொன்னையா கிட்ணப்பிள்ளை (வயது 28, ஆலங்குளம், திருமணமானவர் ஆகியோரே, சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ நடவடிக்கைகளுக்கு

## கால நிபந்தனைகள் அரசு விதிக்கவில்லை

**- கேணல் முனசிங்கா**

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகள் செப்டெம்பர் முப்பதாம் திகதிக்குமுன்னர் முடிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் எதுவும் வழங்கப்படவில்லை. என்று முப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இதேவேளை செய்தியாளர்களிடம் பேசியஅமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கவடக்குகிழக்குட பகுதிகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நினைவு கூருகின்றோம்... 1992-07-11

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**நிசாந்தன்** (கோணமலை கெங்காதரன் - ஆரையம்பதி, மட்டக்களப்பு.)

**தேவா** (இராசசுந்தரம் சிறிகாந்தன் - 13, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.)

பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**தோமஸ்** (தர்மலிங்கம் ரதீஸ்வரன் - இல. 126 27, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.)

தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

★ **நியாஸ்** (மன்னார்)

1987 ஆம் ஆண்டு மன்னாரில் தள்ளாடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் அருகில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, 3 வயதுக் குழந்தை ஆகிய 3 தமிழர்கள். வல்வை - வேரவில் பிள்ளையார் கோயில் அருகில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் 2-ம் நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். குமாரி** (இரட்ணாம்பாள் கணபதி - காட்டுக்குளம், திரியாய், திருக்கோணமலை.)

**கப்டன் சுகுமார்** (குச்சவெளி, திருக்கோணமலை.)

**வினோத்** (காசிநாதபிள்ளை மனோகரன் - தென்னன்மரவடி, திருக்கோணமலை.)

**கப்டன் பாபு** (உதயகுமார் - அச்சங்குளம் நாநாட்டான், மன்னார்.)

**லெப். ஜெயா** (மணியம் ரவி - பண்டாரிகுளம். வவுனியா.)

**லெப் நிலான்** (நாகலிங்கம் மகேஸ்வரன் - 156, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.)

**2-ம் லெப். பிரியங்கா** (குமுதினி விஸ்வநாதன் - நெடியகாடு, வல்வெட்டித்துறை.)

**நவம்** (அந்தோனிப்பிள்ளை புவனேஸ்வரன் - 113, வீடமைப்புத் திட்டம், நாவற்குழி.)

முல்லைத்தீவு / முள்ளியவளை, மாமுனையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எம்மைப் பிரிந்த -

**ஆழ்வார்** (மா. யோகராசா)

ஆனையிறவு குறிஞ்சாத் தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**குணா / கருணா** (நடராசா இராஜசுபேந்திரன் - 543, இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி.)

இதே ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 2 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட ஆறு தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப் படையினரால் படகுடன் மூழ்கடித்துக் கொல்லப்பட்ட பெண்குழந்தை உட்பட 21 தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய - கடல் - வெளி நடவடிக்கையில் தடைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் அமுதினி** (சிவமதி சிவசுப்பிரமணியம் - உரும்பிராய் கிழக்கு, யாழ்.)

**கப்டன் தினேஷ்** (செல்லத்தம்பி சிறிதரன் - பிரதான வீதி, மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.)

**லெப். அருச்சுணன்** (சந்திரசேகரம் சுரேஸ்குமார் - சங்கத்தானை, சாவகச்சேரி, யாழ்.)

**லெப். பாலு** (அருளம்பலம் குமாரதுரை - மேன்காமம், கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை.)

**லெப். சுரேன்** (தெய்வேந்திரன் சுந்தரமூர்த்தி - 534, 2-ம் படிவம், கந்தளாய், திருக்கோணமலை.)

**லெப். பட்டேல்** (அழகையா சாந்தகுணம் - குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.)

**லெப். குனேஷ்** (சின்னத்தம்பி சங்கர் - கெருடாவில் வடக்கு, தொண்டமானாறு, யாழ்.)

**லெப். மைக்கல்** (ஆழ்வான் வினாயகமூர்த்தி - நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம்.)

**லெப். யோகன்** (விசுவநாதன் சிவபாலன் - துணுக்காய் வீதி, மாங்குளம், முல்லைத்தீவு.)

**லெப். அர்ச்சுண்** (பத்திநாதன் தர்சன் 23, கண்டி வீதி, சுண்டிக்குழி, யாழ்.)

**2-ம் லெப். ரகு** (யோசப் பெஞ்சமின் - 6-ம் வட்டாரம், பேசாலை, மன்னார்.)

## நிறைந்த ஓராண்டு நினைவுகள்

### மறைந்தும் மறையாத மாண்புகள்



## கப்டன் வானதி

(செல்வி பத்மசோதி - சண்முகநாதபிள்ளை)

தாயின் மடியில் 19 · 02 · 1964 தாயக மண்ணில் 11 · 07 · 1991

மாண்பு படைத்துயர்ந்த மகளே! மண்மீட்பில்
பூண்ட விரதத்தைப் புனிதமாய் முடித்தவளே!
ஆண்டு ஒன்றாக அகத்துள் அலைமோதித்
தூண்டும் உன்கவிதை துடிப்பாய் எழுகிறது!
மாண்ட மாவீரர் மானப் பெருமூச்சின்
நீண்ட நினைப்பாய் நித்தம் ஒலிக்கிறது!
வேண்டி அவர்நின்ற விடுதலை; நிச்சயமாய்த்
தோன்றும்; அப்போதெம் துயரம் தீருமம்மா!

- நீள நினைந்து நித்தமும்
கை தொழுவோர்

174, கோயில் வீதி;
நல்லூர்;
யாழ்ப்பாணம். (2759)


**கப்டன் லீமா** (கௌரிராஜேந்திரம் - அம்மன்கோயிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி, யாழ்.)

**லெப். நிரோ** (உதயகுமாரி வல்லிபுரம் - புளியந்தோட்டம், மல்லாகம், யாழ்.)

**2-ம் லெப். ஜனகா** (சுகந்தி செந்தில்வேல் - வினோத் வீதி, மானாவளை, சாவகச்சேரி, யாழ்.)

**2-ம் லெப். கிருஸ்ணா** (கௌரிமலர் பொன்னம்

## ஓராண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை ஜெகன்

(சவரியர் கமலா மோகனதாஸ்)

வீரஜனனம் 1-4-1973 வீரச்சாவு 11-7-1991

ஆண்டொன்று சென்றதடா
ஆறவில்லை எம்மனது
காண்டா மிருகமென கர்ச்சித்து நின்றவனே!
வேண்டாத அரக்கர்தனை விரட்டிவிட
சென்றவனே
தூண்டாமணி விளக்காய் துயில் கொண்ட
பெருவிளக்கே
நாம் வேண்டுவது என்றும் உன் பாங்கான
நினைவுகளை!

என்றும் உன் பிரிவால் துயருற்று உன் ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
மற்றும் உன் அன்பின் உற்றார் உறவினர்

மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி. (2788)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

வீரப்பிறப்பு: 05-10-1969 வீரச்சாவு: 28-05-1992



வீரவேங்கை

## ஆவுடையான் (ஆனந்தன்)

(சிவகுரு கனேந்திரன்)

அன்னையவள் தமிழ்மண்ணின் கைவிலங்கை
ஒடிக்கவென்று
ஆவுடையான் என்னும் பெயர்தாங்கிக் களத்தினிலே
அஞ்சா நெஞ்சுடனே புறப்பட்டாய் குகனேந்திரா!
உன்னை மறவாத அன்னை தந்தையுடன்
உடன் பிறந்தார், சுற்றத்தார், ஆசிரியர் உட்படவே

லெப். அர்ச்சுண் (பத்திநாதன் தர்சன் 23, கண்டி வீதி, சுண்டிக்குழி, யாழ்.)

2-ம் லெப். ரகு (யோசப் பெஞ்சமின் - 6-ம் வட்டாரம், பேசாலை, மன்னார்.)

2-ம் லெப். ஜீவன் (நடராசா சிவபாலன் -அம்மன் கோயிலடி, கோண்டாவில், யாழ்.)

2–ம் லெப். கருணா (கந்தசாமி சந்திரகுமார் - மாதிரிக் கிராமம், கும்புறுப் பிட்டி, திருக்கோணமலை.)

2-ம் லெப். சோழன் (சுப்பிரமணியம் இராஸ்த்தரன் - மாசார்பளை, பளை, யாழ்.)

2 ஆம் லெப். யோகன் (தனபாலசிங்கம் மகேஸ்வரன்-அல்வாய்வடக்கு, யாழ்.)

2 ஆம் லெப். நிமலன் (தங்கவேலு குமரன் - 6 ஆம் வாய்க்கால், புன்குளம், திருக்கோணமலை)

2 ஆம் லெப். இருபா (நீலப்பிள்ளை கதிர்காமநாதன்-நாவற்காடு, வரணி, யாழ்.)

2 ஆப லெப். இதயன் (சுப்பிரமணியம் சுந்தர் வெருகல், மூதூர், திருக்கோணமலை)

செல்வா (பொன்னன் நடராசா - வரணிவடக்கு, யாழ்.

ரட்ணா (கந்தையா விக்னேஸ்வரன் - இயற்றாளை, வரணி, யாழ்.)

சரத்பாபு (நவரட்ணம் கோபிநாத் - கல்லூரிஒழுங்கை, கொக்குவில், யாழ்)

ஈசன் தீசன் (பாலசுந்தரம் ரவிச்சந்திரன் - அம்பலத்தடி வீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

கலாதரன் (மாணிக்கம் தர்மராசா - பட்டித்திடல், மூதூர், திருக்கோணமலை)

யசோதரன் (வேலுப்பிள்ளை செல்வராஜா - மடுவீதி, கணேசபுரம், வவுனியா)

அந்தோனி (தம்பிப்பிள்ளை சிவகுமார் -காயங்கேணி, மாங்கேணி'மட்டக்களப்பு)

ரோமியோ (சபாரத்தினம் சுரேஸ்குமார் - அடம்பன், மன்னார்)

கரி (கனகரட்ணம் சதீஸ்வரன் - 197, 1-ம் குடியிருப்பு, கந்தளாய், திருக்கோணமலை)

மொசாட் (ஆறுமுகம் ஜெயமோகன்-4-ம்வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

றெஜினோல்ட் (சந்தனமேரி கணேஸ் - பெரியஉப்போடை, மட்டக்களப்பு)

வாசு (தேசிங்கம் தமிழ்ச்செல்வன் - பழையவினாயகர்கோயிலடி, உடுப்பிட்டி, யாழ்)

ஜெய்ச்சா (செல்லத்துரை அமிர்தலிங்கம் - கோப்பாய் வடக்கு, யாழ்.)

குலேந்திரன் (நவரத்தினம் நாகேஸ்வரன் - புளியங்குளம், ஓமந்தை, வவுனியா)

சேகரன் (கணபதிப்பிள்ளை இராசநாயகம்- காயங்கேணி, மாங்கேணி, மட்டக்களப்பு)

நீலன் (இராமகிருஸ்ணன் இராயகுமார்- 5-ம்வட்டாரம், திரியாய், திருக்கோணமலை)

அல்பட் (கணபதிப்பிள்ளை சுபேந்திரன் - தம்பசிட்டி, பருத்தித்துறை, யாழ்.)

குருபவன் (சாமிநாதன் சாந்தகுமார் - 6-ம் படிவம், இராமநாதபுரம், கிளிநொச்சி)

ஜெகன் (சபுரியர் மோகனதாஸ் - முலவை, மயிலிட்டி வடக்கு, யாழ்)

சிங்கன் (சின்னையா நாகேஸ் - ஒலுமடு, மாங்குளம், முல்லைத்தீவு)

சசி (சௌந்திரராஜா சுரேஸ்குமார் - கோபாலபுரம், நிலாவெளி, திருக்கோணமலை)

கரிகரன் (சதாசிவம் தர்மகுலசிங்கம் - சுதுமலை, மானிப்பாய், யாழ்.)

சுந்தரமூர்த்தி (சிவகுரு கிருஸ்ணபவான் - மாணிக்கத் தியாகராயர்வீதி, சுன்னாகம், யாழ்.)

லக்ஸ்மன் (தவானந்தவேல் குகதீஸ்வரன் - வேல்வீதி, தெணியம்பை, வல்வெட்டித்துறை, யாழ்)

கப்டன் கஸ்தூரி (வசந்தி கணேசன் - ஊரெழு கிழக்கு, சுன்னாகம், யாழ்.)

கப்டன் வானதி (பத்மசோதி சண்முகநாதபிள்ளை - 174, கோயில்வீதி, நல்லூர், யாழ்.)

லெப். ஆந்திரா (மேரிபுஸ்பலதா சிங்கராயர் - இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

வீதி, மானாவளை, சாவகச்சேரி, யாழ்.)

2-ம் லெப். கிருஸ்ணா (கௌரிமலர் பொன்னம்பலம் - மாந்தை, திருக்கேதீஸ்வரம், மன்னார்)

2-ம்லெப். பைரவி (திருமலர் கணேசமூர்த்தி -அள வெட்டி, யாழ்.)

ஜீவா (சசிலதா தனபாலசிங்கம் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ்)

மங்கை (மனோன்மணி செல்வராஜா-கச்சேரிநல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.)

தமயந்தி (மகேஸ்வரி தில்லையம்பலம் - பொன்னகர், முள்ளியவளை, முல்லைத்தீவு.)

யசோ (சுஜிதா சிவஞானம் - செட்டியவூர், தொண்டமானாறு, யாழ்.)

கோமதி (சுடரொளி கனகலிங்கம் - அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, யாழ்.)

ராணி (கமலேஸ்வரி ஐயாசாமி - 5-ம் கட்டை, அளம்பில், மணலாறு )

குட்டியா (சாந்தநாயகி விஸ்வலிங்கம் - சிவன்கோயிலடி, மட்டுவில் தெற்கு, யாழ்.)

ஆரதி (புஸ்பாதேவி முருகேசு - றீயோ பேக்கரி, 406, யோகபுரம், துணுக்காய், முல்லைத்தீவு.)

வனஜா (ஜானகி சங்கர் - மன்னம்பிட்டி, பொலநறுவை.)

கலைவாணி (நிர்மலா பாலசுந்தரம் - கச்சாய் வீதி, சாவகச்சேரி, யாழ்

துளசி (இரஞ்சிதமலர் ஐயாத்தம்பி - குடமியன், வரணி, யாழ் )

மரிஸ்ரலா (கொலின்கலிஸ்ரா மரியாம்பிள்ளை - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ்.)

அகல்யா (சந்திரகலா கைலாயபிள்ளை - யோகபுரம், மல்லாவி, மாங்குளம், முல்லைத்தீவு.)

ரமேஸ் (தம்பித்துரை முத்துகுக்மாரு - சிறுவிளான், இளவாலை, யாழ்.)

தர்மராசா (பட்டித்திடல், மூதூர், திருக்கோணமலை.)

தமிழீழக் கடற்பரப்பில் (சங்குப்பிட்டி) பயணம் செய்து கொண்டிருந்த படகினை மையமாகக் கொண்டு சிறிலங்காப் படை விமானங்கள் வட்டமிட்ட போது கடலில் குதித்ததில் பலியான 3 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி, 4675)

---

உன்னை மறவாத அன்னை தந்தையுடன்
உடன் பிறந்தார், சுற்றத்தார், ஆசிரியர் உட்படவே
இன்னும் உனை இழந்த சோகத்தால் மீளவில்லை
பொன்னும், பொருளும், பொய்வாழ்வும் வீணென்று
மண்புகழ் எம்தலைவன் பிரபாவின் ஆணைதனைச்
சென்னி மேற் கொண்டாய்!
வளலாய் களம் புகுந்தாய்!
உன்னை அர்ப்பணித்தே உயர்ந்தாய்!
மாவீரா! மண் உன்னை மறக்காது
வரலாற்றில் பெயர் பொறிக்கும்.

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.


நினைவுகூரும்
**பெற்றோர், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்**

(சி/4659)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
07
—
06
—
1969



வீரச்சாவு
15
—
06
—
1989

யாழ். நாயன்மார்கட்டு

**இரகர் சிவா**

( இரகுநாதன் சிவபரன் )

**திதி 11 - 07 - 1992 சனிக்கிழமை**

எந்தையொரு தாய்மகிழ்ந்து வாழ்ந்த இந்த
ஈழத்தை அந்நியர்கள் அடக்கியாளல்
விந்தையிந்த நிலைமாற வேண்டும் என்று
வேங்கையென வீறுடனே களத்திற் சென்று
பந்தமுறப் பொய்யுடலைப் போக்கி மேலாம்
பாங்குடைய புகழுடலை நிறுத்திச் சென்றான்
செந்தமிழன் **சிவபரனை** நினைக்கும் இந்நாள்
சிந்தையிலே வீறு கொள்ளும் சிறந்த நாளே.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

54, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்களும்,
நண்பர்களும்.

( 2792 )

சிந்தனைக்கு

தயங்கும் மனம், மிகத் தரங்கெட்ட உடைமையாகும்.
—யூரிப் பிடீஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# தமிழர் மீதான முற்றுகை

யாழ். குடாநாட்டை முற்றுகையிடுவதில் சிறிலங்கா இராணுவம் தீவிர கவனம் செலுத்துகின்றது. இறுதியாக, பிரதான நிலப்பரப்புடன் போக்குவரத்து நடை பெற்றுக் கொண்டிருந்த கொம்படி, ஊரியான் பாதைகளை மூடியதன் மூலம் இம்முற்றுகை குறிப்பிடும் படியான அளவிற்கு தீவிரமடைந்துள்ளது.


விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கே இம்முற்றுகை என அரசாங்க மற்றும், இராணுவத்தரப்பு தெரிவிக்கின்றபோதும் தமிழ் மக்கள் மீதே இம்முற்றுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதுஎன்பதில் சந்தேகம்எதுவுமில்லை.

இம்முற்றுகையானது பெரும்பாலும் பொருள்களின் விநியோக வழிகளைத் துண்டிப்பதாகவே அமைந்துள்ளது. இதன் மூலம், இரண்டு வருடங்களுக்கு முன் சிறிலங்கா அரசாங்கம் அமுல்படுத்திய பொருளாதாரத் தடைகள் மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளன எனலாம். அதாவது குடாநாட்டிற்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமல்ல, அத்தியாவசியப் பொருட்கள் உட்பட சகல பொருட்களும் வந்தடைவதற்கு விதிக்கப்பட்ட தடையாகவே இவ் முற்றுகையைக் கொள்ள முடியும்.

சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது வரும் இராணுவ நடவடிக்கைகளும் முற்றுகைகளும் மலேசியாவில் இடதுசாரிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் நைஜீரியாவில் பயபரா தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்க நைஜீரிய அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளையும் ஒத்தவையாகும். அதாவது மக்களையும் போராளிகளையும் ஒரு பகுதிக்குள் ஒதுக்கிவைத்து அழித்து விட எடுக்கும் முயற்சியாகும்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையானது தனியாக ஐ. தே. கட்சியின் முடிவென்றும் கூறிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு

# நெருக்கடி கண்டு நெகிழாத உறுதி கொண்ட நெஞ்சம்



## -அமரர் கோவை மகேசனின் நினைவாக...

தமிழ் மக்களிடையே சுதந்திரச் சுடரைப் பிரகாசிக்கச் செய்வதில் 'சுதந்திரன்' பத்திரிகை ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. தந்தை செல்வா அவர்களால் நிறுவப்பட்ட 'சுதந்திரன்' பத்திரிகையானது தமிழினத்தின் எழுச்சிக்கும், தமிழ் மக்களிடையே தன்மான உணர்ச்சிக்கும், வித்திட்டு வளர்ந்தது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

இத்தகைய 'சுதந்திரன்'பத்திரிகையின் ஆசிரியராக இருந்த கோவை மகேசன், 04-07-92இல் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி ஆறாத் துயரத்தைப் பெருக்குவதாகும். தனது எழுத்துக்களாலும், சொற்பெருக்குகளாலும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை நிறுவவும், அவர்களது விடுதலை உணர்ச்சியை வெளிச்சம் போட்டுக் காட்டவும் கோவை மகேசன் என்றுமே தயங்கியது இல்லை.

சிங்கள - தமிழ் பாட்டாளி மக்களுக்கு இடையே ஐக்கியத்தை வளர்த்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று முற்போக்கு முலாம் பூசியவர்கள் முழக்கமிட்டுக் கொண்டிருந்த வேளையில், தமிழினப் பற்றை ஊட்டி வளர்த்திட திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டவர் கோவை மகேசன். தமிழ் மக்களின் மொழிப்பற்று, தாயகத்தின் மீதான பாசம், தமிழின நேசம் என்பனவெல்லாம் குறுகிய இனவெறி மொழிவெறி, மற்றும் வகுப்புவாதம் என்று முத்திரை குத்தப்பட்டு வந்த சூழலில்தான் கோவை மகேசன் பத்திரிகை ஆசிரியராய் பணியாற்றினார்.

தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஓங்கவும், விடுதலை வேட்கை வாழவும் வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்தவர் கோவை மகேசன். சுதந்திரன் இதழில் அவர் வாரா வாரம் எழுதி வந்த ''அரசியல் மடல்'' வாசிப்பதற்காகவே வாரம் முழுவதும் காத்திருந்த வாசக நெஞ்சங்கள் பலப்பல. அன்றாட அரசியல் நிகழ்வுகளை விமர்சனம் செய்யவும் இலட்சிய வேட்கையை ஊட்டவும் அவர் இந்தப் பகுதியை நன்கு பயன்படுத்தி வந்தார்.

திராவிட இயக்கத்தின்மூத்த தலைவர்களின்பால் கவர்ச்சியும், திராவிட இயக்கத்தின் கருத்துக்களின் மீது பிடிப்பும். தந்தை பெரியார் போன்ற தமிழகத் தலைவர்கள் மீது மதிப்பும் கொண்டிருந்தவர் கோவை மகேசன். அதனை அவரது எழுத்துக்களின் மூலமும், சொற்பொழிவுகளின் மூலமும் உணர்ந்து கொள்ளலாம்.

ஐக்கிய முன்னணி அரசின் காலத்தில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டி வந்த கூட்டணி வட்டாரங்கள் கோவை மகேசனின் எழுத்துக்களையும், செயலையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் பின்னர் தமிழீழ இலட்சியத்தை கூட்டணியினர் மூட்டைகட்டி வைத்துவிட்ட போது கூட்டணியினரைச் சாடவும், இலட்சியத்திலிருந்து வழுவியோரை அம்பலப்படுத்தவும், இலட்சியத்திற்காகப் போராட்டம் நடத்தும் வேங்கைகளை இனம் காட்டவும், கோவை மகேசனின் பேனா தவறவில்லை, துணிவோடு இதனைச் செய்ய முனைந்தமைக்காக மூத்த தலைவர்கள் எனச் சொல்லிக் கொண்டோரின் முகஞ்சுழிப்புக்கும், அவமதிப்புக்கும் ஆளாக நேர்ந்த போதும் அவர் அஞ்சிடவில்லை. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் தூய்மையான இலட்சிய தாகத்தோடு பணியாற்றியமைக்காக மிரட்டல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேர்ந்த போதும் கொண்ட கொள்கைக்காக செயற்பட்டவர்.

### இளையவன்

தமிழீழ இலட்சியத்தை உரத்து முழங்கிய சுதந்திரனுக்கு எதிராக'உதயசூரியன்' முகிழ்ந்து எழுந்தது நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனையாக வசை பாடிய கூட்டத்தினர் கோவை மகேசனை இழித்தும் பழித்துரைத்தும்தமது ஆதங்கத்தைத் தீர்த்துக்கொண்டனர். எனினும் கலக்கம் எதுவுமின்றி அவரது பணி தொடர்ந்தது.

தமிழீழப் போரட்டத்தில் தங்கும் இடம்தேடி மாவட்ட அபிவிருத்திச்சபைகளின்முன்பு மண்டியிட்ட கோழைத்தனத்தை தோலுரித்துக் காட்டிய கோவை மகேசனை கூட்டணியின் சட்ட வரம்புக்குள் கட்டிப்போட முடியாமல் கூட்டணித்தலைமை திணறியது, அதாவது கட்சியின் நலன்களுக்கு அப்பாற்பட்டு இனத்தின் இலட்சியத்தை சுதந்திரன்இடித்துரைத்தது தவறு என்று அர்த்தம் கற்பிக்கப்பட்டது.

ஆனால் எந்தச்சலிப்பும் இல்லாமல் இலட்சியத்தில் நம்பிக்கையோடும் ஆணித்தரமான பற்றுறுதியோடும் செயற்பட்டதால் கோவை மகேசன் அவர்களும் சிறை வாழ்வைப் பரிசாகப் பெற நேரிட்டது. கறுப்பு ஜூலையின் இருண்ட நாட்களில் வெலிக்கடைச்சிறையில்வாசம் செய்த அவர் மட்டக்களப்பு சிறை உடைப்பின் பின்னர் தான் வெளியுலகில் திரிய முடிந்தது,

> திரு.கோவை மகேசன் சென்னையில் 04-.07.92 அன்று காலமானார். சில காலமாக இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

இதையடுத்து தமிழகத்திற்கு சென்ற அவர் ''வீர வேங்கை'' இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணிபுரிந்தார். இந்தியப்படைகளுக்கு எதிரான யுத்தம் நீடித்த போதும் அதற்கு முன்னரும், பின்னரும் தமிழகத்தில் தங்கியிருந்து தமிழீழ விடுதலைப் போரட்டப் பணிகளில் தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்டிருந்த கோவை மகேசனின் இழப்பு கண்டு தமிழீழ அன்னை வேதனை கொள்வது தவிர்க்க முடியாதது. இக்காலப்பகுதியில் இந்திய உளவுப்பிரிவும், புலனாய்வுப் பிரிவும் மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளும் கொடுத்துவந்த தொல்லைகளுக்கும் மிரட்டல்களுக்கும் குனிந்து வளையாமல் நிமிர்ந்து நின்று தமிழீழக் கொள்கையை பிரகடனம் செய்தவர் அவர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆற்றல் மிக்க செயலுக்குத் தூண்டும் எழுத்துக்களை வரையும் ஒரு படைப்பாளியை-விடுதலை உணர்வை விதைக்கும் ஒரு பத்திரிகையாளனை - தமிழினத்தின் மீதும் தாயக மண்ணின் மீதும் உறுதியான பற்றுமிக்க ஒரு புதல்வனை இழந்து விட்ட சோகம் இந்தத் தேசத்தில் நிறைகிறது.

# அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுமாண பணி ஆரம்பம்?

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சலசலப்பு

(டில்லி)

அயோத்தியாவில் ... பிரச்சி...

...கப்பட்டது.

...தது.

பல்கலை அனுமதி முறை

# தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபித்து மகஜர்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(உயர்தரம்)1990 ஓகஸ்டில் வடபகுதி தவிர்ந்த பிறபகுதிகளில் நடந்த தேர்...

தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம் என்றும்,

தேர்வு முடிந்து ஓராண்டுக்...

லங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையானது தனியாக ஐ. தே. கட்சியின் முடிவென்றும் கூறிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வாக மிகக் குறைந்ததீர்வுத்திட்டத்தைக்கூட சிங்களக்கட்சிகள் ஏற்கவில்லை. தமிழ்க்குழுக்கள் முன்வைத்த மிகக்குறைந்ததீர்வான நான்கு அம்ச திட்டத்தை ஆரம்பத்திலேயே ஐ. தே. கட்சி நிராகரித்துவிட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிலதினங்களுக்குமுன் நிராகரித்துவிட்டது. லலித் குழுவினரோ வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மீளநிர்ணயம் செய்ய வேண்டும் என்கின்றனர்.

அதாவது ஒட்டுமொத்தமாக சிங்கள அரசியற் கட்சிகள் அனைத்தும் இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாகவும், அரசியற் தீர்விற்கு எதிராகவும் உள்ளன அதாவது சிங்கள அரசியல் கட்சிகள் எதையும் அரசியற் தீர்வு குறித்து ஒரு முகப்படுத்த முடியாதநிலை இருக்கும்வேளையில் இராணுவத் தீர்வு ஆயின்மட்டுமேஒருமுகப்படுத்தக்கூடியதாக வுள்ளது. இந்நிலையில், அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்தோ அன்றி இனப்பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பது குறித்தோ அக்கறை கொள்ளத் தேவையில்லை. சில வேளை, அரசாங்கம் நெருக்கடிகள் காரணமாக தீர்வு குறித்து சிந்திக்குமானாலும் அது அரசாங்கத்துக்கே ஆபத்தாக முடிந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதில்லை. அதாவது தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது குறித்து பௌத்த பேரினவாதம் ஒரு போதும் எண்ணுவதில்லை.

ஆகையால், இராணுவ நடவடிக்கைகளும், முற்றுகைகளும், புலிகளுக்கு எதிரானவையல்ல. தமிழர் தேசியத்திற்கு எதிரானவை; தமிழரின் உரிமைகளுக்கு எதிரானவை; தமிழ் மக்களுக்கு எதிரானவை; தமிழர் ஒழிக்கப்பட வேண்டும், ஒடுக்கப்பட வேண்டும் என்ற பௌத்த பேரினவாதத்தின் ஒட்டு மொத்த தீர்மானத்தின் முடிவால் எழுந்தவை.

இந்நிலையில், தமிழர் மீது ஏற்றப்பட்டுள்ள பாரிய இச் சுமையை தாங்கிக் கொள்வதும், உடைத்தெறிவதும் தமிழ் மக்களின் பொறுப்பாகிறது. இன்று ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார முற்றுகையை உடைத்தெறிய சிக்கனமும், உற்பத்தியும்அவசியமானவை. அதேவேளை, இராணுவ அடக்கு முறைகளை உடைத்தெறிய போராடும் மன உறுதியும் அவசியமாகிறது.

## பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சலசலப்பு

(டில்லி)

அயோத்தியாவில் பிரச்சினைக்கு உட்பட்ட இடத்தில் கட்டுமாணப் பணிகள் நடப்பதாக வந்திருக்கும் தகவல்களை அடுத்து இந்தியப்பாராளுமன்றத்தின் இரு சபைகளும் நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்டது.

இதே நேரம் இந்தியாவின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவை நிர்வாகக்குழு நேற்று முன் தினம் கூடி அயோத்தியாவில் நடைபெறும் பணிகள் பற்றிய நிலைமையை பரிசீலனை செய்தது.

உத்தரப் பிரதேச அரசு அங்கு மேற்கொள்ளும் கட்டுமாணப் பணிகளால் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக நிலவி வரும் ஓரளவுக்கு எட்டப்பட்ட அமைதியை இந்த முயற்சி பெரிதும் பாதிக்கும் என்றும்,

இது தொடர்பாக நீதிமன்றத்தின் ஆணைகளை மதித்து நடக்குமாறு மத்திய அரசாங்கம் உத்தரப்பிரதேச அரசை வலியுறுத்த வேண்டுமெனவும் இந்த நிர்வாகக் குழு கேட்டுள்ளது.

## 12-ம் நூற்றாண்டு நாணயம் தமிழகத்தில் கண்டெடுப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நரிக்காடு கிராமத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படும் நாணயத்தை தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டு எடுத்துள்ளனர். வீரக்கேரளன் நாணயம் என்ற பெயரைக்கொண்ட இது வெள்ளியும் தாமிரமும் கலந்த கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பக்கத்தில் தேவநாகரி எழுத்துக்களும் மற்றப்பக்கத்தில் அங்குச சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு பெரியகுடுவைக்குள் இந்த நாணயங்கள் பல மூடி வைக்கப்பட்டிருந்தது.

## தஞ்சம் கோருவோர் தொகை ஜேர்மனியில் அதிகரிப்பு

இவ்வருட முதல் ஆறு மாத காலத்திலும் ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரியுள்ளவர்களின் தொகை கடந்த வருட இதே காலப்பகுதித் தொகையை விட இரு மடங்காக அதிகரித்துள்ளது என உள்துறை அமைச்சர் றுடொல்ப் கிட்டர்ஸ் கடந்த வியாழனன்றுதெரிவித்தார்.

யூகோஸ்லாவியாவிலிருந்து 72, 400 பேரும் ருமேனியாவிலிருந்து 29, 200 பேரும் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

ஜனவரியிலிருந்து ஜூன் மாதம் வரை 1, 87, 455 வெளிநாட்டவர்கள் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர். கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 90, 769 பேர் மட்டுமே அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களில் பத்து சதவீதமானோருக்கே அரசியல் தஞ்சம் அளிக்சப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி உள்ளவர்களின் மனுக்களைத் துரிதமாக விசாரிப்பதற்கான புதிய சட்டம் ஒன்று கடந்த புதன்கிழமையன்று அமுலுக்கு வந்துள்ளது.

அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்கள் அகதிமுகாம்களில் தங்கி இருக்க வேண்டும். ஆறுவார காலத்திற்குள் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா அல்லது தொடர்ந்து அகதிமுகாமில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்களா என்பது பற்றி அறிவிக்க புதிய சட்டம் வழி செய்துள்ளது.

## அணு ஆயுததடை ஒப்பந்தம் இந்தியா கையெழுத்திடாது

— நரசிம்மராவ்

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் அடுத்த ஆண்டு மறுபரிசீலனை செய்யப்பட விருப்பதனால் இப்பொழுது அதில் இந்தியா கையெழுத்திடுவதற்கானசாத்தியக்கூறு இல்லை என பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார். மாநிலங்களவையில் வியாழன் நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டு அவர்பேசுகையில், அணுவாயுதத் தடை ஒப்பந்தம் பாரபட்சமானதென்றும், குறிப்பிட்ட காலத்திற்குப்பின் உலகில் அணுவாயுதங்கள் இருக்காது என்று ஒப்பந்தத்தில் கூறப்படவில்லை என்றும் இந்தியப் பிரதமமந்திரி தெரிவித்தார். குறிப்பிட்ட காலத்திற்குப் பின் உலகில் அணு ஆயுதங்களே இருக்கக் கூடாது என்பதுதான் இந்தியாவின் நிலை என்றும் அவர் தெளிவு படுத்தினார். அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம் இப்போதுள்ள வடிவத்திலேயே தொடர்ந்து இருக்கப் போவதில்லை மறு ஆய்வு செய்யப்பட இருக்கிறது. ஆகவே இப்போது அந்த ஒப்பந்தத்தில் தாமோ அல்லது மற்றவர்களோ கையெழுத்திடுவதில் பொருள் இல்லை என்று திரு. நரசிம்மராவ் தெரிவித்தார். அணு ஆயுதங்களை வைத்துக் கொள்ள சில நாடுகளுக்கு வாய்ப்புகள் உள்ளதால் இந்த ஒப்பந்தம் பாரபட்சமானது என அவர் கூறினார்.

க.பொ.த.(உயர்தரம்)1990 ஒகஸ்டில் வடபகுதி தவிர்ந்த பிறபகுதிகளில் நடந்த தேர்வையும், 1991 ஏப்பிரலில் வட. பகுதிக்கெனச் சிறப்பாக நடத்தப்பட்ட தேர்வையும் தனித்தனி இரு வேறு தேர்வுகளாகக் கருதி வெவ்வேறு வெட்டுப்புள்ளிகளை விதித்து பல்கலைக் கழக நுழைவுக்குத் தேர்ந்தெடுப்பதில் உள்ள தவறையும் அதனால் ஏற்பட்ட தீயவிளைவுகளைச் சுட்டிக்காட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலர் த.பஞ்சலிங்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், 1990 ஒகஸ்ட் க. பொ. த. (உ. த.) தேர்வும், 1991 ஏப்பிரல் க.பொ.த. (உ.த.) தேர்வும் எல்லா நோக்கங்களுக்கும் ஒரே நேரத்தில் இரு பகுதிகளாகக் கொள்ளப்படும். வேறுபாடு காட்டப்பட மாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் உறுதி அளித்தார். தேர்வைப் புறக்கணிக்க முடிவு செய்த மாணவர் இந்த உறுதிமொழியைஅனுசரித்தேதேர்வுக்குத் தோற்றியவர்கள் என்பதை ...றோம் என்றும்,

தேர்வு முடிந்து ஓராண்டுக்குப்பின்பல்கலைக்கழகநுழைவு வெட்டுப் புள்ளி அறிவிப்பில் உயர் கல்வி அமைச்சர் ஏ.சி. எஸ். ஹமிட் இரு தேர்வுகளும் வேறு வேறாகக் கருதப்பட்டு நுழைவு வெட்டுப் புள்ளிகள் வெவ்வேறாகக் கொள்ளப்படும் என்று இப்போது கூறியுள்ளார் இதுபரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்லயின் உறுதி மொழிக்கு முரணானது ஆகும் என்றும்,

இவ்வாறு கொள்வதாயின் இரு தேர்வுகளையும் வெவ்வேறாகக் கருதி, வெட்டுப் புள்ளிகளை வெவ்வேறாகக்கொண்டு 1990 ஒகஸ்ட் தேர்வு மாணவர்களுக்கு வேறான நுழைவும், 1991மாணவர்களுக்குவேறான நுழைவும் வழங்கப்பட வேண்டும். உயர் கல்வி அமைச்சர் இவ்வாறு செய்வாராயின் அது பாராட்டுதற்குரியது. ஆனால் அவர் யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார் இது கண்டிக்கத்தக்கதுஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சை ஆகஸ்டில் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

வடக்கில் தடைப்பட்ட கிராமசேவையாளர் தெரிவிற்கான போட்டிப்பரீட்சைவரும் ஆகஸ்டில் நடாத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர்வெதமுல்ல உறுதி அளித்துள்ளார்.

கடந்த மாதம் இலங்கை முழுவதும் மேற்படி பதவிக்கான பரீட்சை ஒரே நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டபோதிலும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளாலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாலும் உரிய நேரத்தில் வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படாததினாலும் யாழ். மாவட்டத்தில் இப்பரீட்சை நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

தற்போது இப்பரீட்சையை உடனடியாக இங்கு நடாத்துதல் வேண்டும் என பரீட்சை ஆணையாளரிடம் யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

இவரது இவ்வேண்டுகோளுக்கு பரீட்சை ஆணையாளர் அனுப்பி வைத்துள்ள பதிலில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சையுடன் சேர்த்து இப்பரீட்சையும் நடைபெறும் எனவும் உறுதி அளித்துள்ளார்.

(ச), (க)

ஈழநாதம்

### அவசரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், நல்லூர், யாழ் மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுடனான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்று (சனி) மாலை 03. 00 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாமல் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### ஆய்வரங்கம்

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் 'மீண்டும் புதிதாய் பிறப்போம்' என்றநாவல் அறிமுக ஆய்வரங்கு 11-07-92 இன்று மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்நடைபெறும் அறிமுக ஆய்வரங்கில் நூல் அறிமுக உரையினை விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களும் ஆய்வுரைகளை ஐ. சாந்தன், கலாநிதி சபா ஜெயராசா, வி. பி. சிவநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நான்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கால ஆயுதம்தாங்கியிருப்பவர்களை நிராயுதபாணிகளாக்குவதே நோக்கம் என்றும் அது நாளையே நிறைவேற்றப்பட்டாலும் சண்டை உடன் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று தெரிவித்தார்.

நெய்தல் கலைஞர்களை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

10. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 4823

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:-

26-6933, 40-6979, 28-1928, 24-4153, 42-2995, 26-7546, 26-5814, 28-8579, 27-9756, 26-1728, 41-9478, 42-3731, 36-4187, 36-2937, 27-6692, 42-2355, 42-3267, 40-7541, 26-4139, 27-9489, 41-4194, 24-524, 24-922, 27-9492, 26-2299, 26-887, 41-9166, 71-2064, 70-9253.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

26-763, 42-1462, 41-1227, 24-6439, 42-0849, 27-1573, 40-7207, 26-1658, 26-1741, 41-2509, 24-5140, 26-776, 27-297, 26-5475, 26-536, 42-0970, 26-3922, 21-9033, 26-4436, 41-9530, 24-6568, 27-9505.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

17 · 07 · 1972

வீரச்சாவு

11 · 07 · 1990

### 2-ம் லெப. சாளினி
(அருமைச்சந்திரன் நவநீலவதனா
வல்வெட்டித்துறை)

பகை கண்டு பதறாமல்
நிலையெடுத்தாள் - எதிரி
புறம் காட்டி ஓடிடவே
போர் தொடுத்தாள்.
உயிர் போகும் என
இவள் அஞ்சவில்லை.
உயிரான விடுதலைக்கே
தன்னுயிர் ஈந்தாள்.

— குடும்பத்தினர்.
(சி, 4676)

## ஓராண்டு நினைவு



தோற்றம் 20. 04 1971 — வீரசசாவு 11. 07. 1991

### 2ம் லெப். ஜனகா
(செந்திவேல் சுகந்தி)

(ஆனையிறவு முகாம் தகர்ப்பில் வீரமரணம்)

இந்திய இராணுவம் வந்தது இங்கு-பல
இன்னல்கள் செய்தது எம் மண்ணில் நின்று
பொங்கி எழுந்தாள் இளையவள் இவளும்
புலிப்பாசறை தேடி புறப்பட்டாள் அன்று
செங்குருதி சிந்தி எம் மண் காப்போம்
செந்தமிழீழம் நிச்சயம் காண்போம்
இந்தியா போனது இன்னல்கள் தீர்ந்தது
இங்குமோர் புகழ் செந்தமிழ் காத்தது
மீண்டும் ஓர் புயல் மேவிய சிங்களம் - எம்மை
ஆட்டிட நினைத்து அடிபணிய சொன்னது
தொடர்ந்தது யுத்தம் அழிந்தனர் பகைவர்
எதிரியின் பாசறைகள் - எம் மண்ணில் இருப்பதா
கொக்காவில் கொண்டச்சி மாங்குளம் வரிசையில்
ஆனையிறவிலும் சமர்களம் நடந்தது
வேங்கைகள் சூழ்ந்தனர் வெடிகுண்டு போட்டனர்.
சின்னவள் இவளும் சீறியே பாய்ந்தாள்
சிந்திய குருதியினை மண்ணில் சிகப்பாக்கி
மண்ணினை அணைத்து மாவீரர் ஆனாயோ
அன்னியர் படை முகாம் அடியோடு அழியும்

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்.

(சி4669)

### ஆலங்குள

நாகையா கனகரட்ணம் (வயது 22, ஆலங்குளம், திருமணமானவர்), கந்தவனம் மகேந்திரன் (வயது 20 ஆலங்குளம்), கந்தன் கதிர்காமத்தம்பி (வயது 25 ஆலங்குளம், திருமணமானவர்), செல்லத்தம்பி நாகராசா (வயது 19, மாங்கேணி, திருமணமானவர்) கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது 21 ஆலங்குளம்), நாகமணி இளையதம்பி (வயது 27 ஆலங்குளம், திருமணமானவர்) ஆகியோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களாவார்.

### வீரச்சாவு

மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரவேங்கை அருள்நம்பி (மரியதாஸ் ஜோன்சன்- 21/4 புது வீதி, கொய்யாத் தோட்டம், பாசையூர்) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார்.

06 - 07 - 92 அன்று வலிகாமம்பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரவேங்கை கலையரசன் (றொபின்சன் அரிகிரிதாசன் டொரிக்ரொத் - மயிலிட்டி, யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார்.


### வீரவேங்கை இளங்கோ

06 - 07 - 92 அன்று பெண்டுகள்சேனையில் நடந்த மோதலில் காயமடைந்த வீரவேங்கை இளங்கோ (செல்லத்தம்பி பாலச்சந்திரன் - பொருவில், மன்னம்பிட்டி, பொலநறுவை) என்ற போராளி 09 - 07 - 92 அன்று வீரச்சாவடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## சொந்த மண்ணில் அந்நியர் வரவை - தம்முயிர் தந்து தடுத்தனர்

## வேங்கைகள்



கப்டன்




கப்டன் ஜெகதீசன் -



கப்டன்



லெப்டினனட்



லெப். சந்திரபவான்



லெப். சேந்தன்

கப்டன்
ஈழவேந்தன்-சுப்ரா
(பாலசுந்தரம், சதீஸ் —
மயிலிட்டி, யாழ்ப்பாணம்)


கப்டன் ஜெகதீசன் –
(டானியல்)
(அருளம்பலம் கிருபாகரன் -
7ஆம் வட்டாரம், சம்பூர்,
திக்ருகோணமலை)

கப்டன்
இளையவன்
(பாலு அந்தோனிப்பிள்ளை
செல்வகுமாரன் -
கைதடி வடக்கு, நாகபுரம்)

லெப்டினனட்
தமிழ்மாறன்
(நெல்லிநாதன் விவேகா
னந்தன் - அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை)

லெப். சந்திரபவான்
(அலோசியஸ்)
(சுந்தரலிங்கம் மோகனதாஸ்
கொத்தியாகாடு, தொண்ட
மனாறு)

லெப். சேந்தன்
(பரஞ்சோதி நிரஞ்சன் -
கொச்சடித் தோட்டம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்,



லெப். செழியன் (சீனு)
(காந்தன் குமணன் -
நடராசா வீதி, வல்வெட்டித்
துறை)



2ஆம் லெப்டினனட்
புலவன்
(பொன்னையா மதியழகன் -
புதூர் திமிலைதீவு,
மட்டக்களப்பு)



வீரவேங்கை
அன்பழகன்
(பழனி கோபாலர்விஸ்வேஸ்
வரன்- கருகம்பனை கீரிமலை)




வீரவேங்கை
அறிவொளி
(தங்கலிங்கம் சிவகுகன் -
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி)



வீரவேங்கை ஆதவன்
(குகதாஸ் திருமாறன் -
புதுவளவு ஒழுங்கை,
வல்வெட்டித்துறை)



வீரவேங்கை
குமாரவேல்
(சிவப்பிரகாசம் பிரம்மசீலன் -
நீலியம்பனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை)



வீரவேங்கை
சொக்கன் சின்னா
(கிறிஸ்ரி ராஜ்மோகன் -
ஆலடிச் சந்தி, நல்லூர்)



லெப்டினனட் வீமா
(ரவீந்திராதேவி தங்கராஜா -
நவக்கிரி, புத்தூர்)




லெப்டினனட் வதனி
(பவானிசின்னன்-யோகபுரம்,
மல்லாவி)




2ஆம் லெப்டினனட்
கேரனா
(வசந்தரூபி தில்லையம்பலம்
3ஆம் குறுக்குத்தெரு,
பொம்மைவெளி, அராலி வீதி)

வாடியடிச் சந்தியில் இருந்து இயக்கச்சி பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் நேற்று முந்தினம் இடம் பெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 18 வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.



வீரவேங்கை
தில்லானா
(கௌரி கருப்புசாமி-
ஆட்காட்டி வெளி,
வட்டக்கண்டல், மன்னார்).



வீரவேங்கை
நகைமுகன்
(அருணகிரி சற்குணராசா —
வேலணை, யாழ்ப்பாணம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டுஜூலை மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடபட்டது